


- வாழ்வோம்

புதையல் 7

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...



‘நியாய விலைக் கடைகள்!’

பல தடவை அரசினர் நியாய விலைக் கடைகளைத் திறந்து, அதன் வாயிலாக நாட்டில் ஏற்பட்டுவருகின்ற இல்லாமையை - போதாமையைப் போக்க முயன்றிருக்கின்றனர். ஆனால், இதன்மூலம் சர்க்காரின் உத்தேசம் நிறைவேற்றப்பட்டதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டிய அளவுக்கு, நியாய விலைக் கடைகளில் நியாயம் வழங்கப்படாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

திறக்கப்படும் இக்கடைகளால், பொதுமக்களுக்கு உண்மையான பலன் கிடைக்கின்றதா என்பதையும் அரசினர் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ கடமைக்குச் செய்வதாக எண்ணி, கண்துடைப்பாக இருக்கட்டும் என்று நினைத்து, ‘இத்தனை கடைகள் திறந்தோம்; இத்தனை டன் அரிசி விற்பனையாயிற்று’ என்று கணக்குக் காட்டுவதை நோக்கமாகக் கொள்ளாமல், ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் அக்கடைகள் நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ‘நியாய விலைக் கடை’ என்ற பெயரே பொருத்த மற்றதாகும். ஒன்றினை ‘நியாயவிலைக் கடை’ என்று அழைத்தால், மற்றது நியாயமற்ற கடை என்று ஆகின்றது.

தனது ஆட்சியில் அநியாயத்தையும் ஒரு பக்கம் உலவ விட்டுவிட்டு, இன்னொரு பக்கம் நியாயத்தை நிலைநாட்டும் முயற்சி வீணாகவே முடியும். அநியாயத்தை அகற்றுவது அரசினரின் கடமை. எப்பாடுபட்டேனும் அதனை ஒழித்தாக வேண்டும். ஆனால், அந்த முயற்சியில் ஈடுபடாமல் அரசினர் தாங்களே சில கடைகளைத் திறந்து, ‘நியாய விலைக் கடை’ என்று அவற்றைப் பெயரிட்டு அழைப்பது கேலிக்கு இடமாகின்றது.

எப்படியோ, பெயர் ‘நியாய விலைக் கடை’ என்று அமைத்துவிட்டார்கள். அந்தப் பெயருக்காவது அங்கே நியாயம் நிலவ வேண்டும்; நிலைக்க வேண்டும். ஆனால், கடந்தகால அனுபவம், இந்த எச்சரிக்கையை விடுக்கச் செய்கிறது. தனிப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட கடைகளும் பெரும்பாலும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கோ, அவர்களோடு தொடர்புடையவர்களுக்கோதான் தரப்பட்டன. சில இடங்களில், கூட்டுறவு நிறுவனங்களின் பெயரால் நடைபெற்ற கடைகளிலும் மேற்கூறப்பட்ட ‘இன’த்தவரின் ஆட்சியும் தலையீடும் இருந்தன. இதனால் நியாயவிலைக் கடையில் கிடைத்துவந்த பொருள்கள், சில பேருக்கு மட்டும் வாய்த்த பேறாக இருந்தது. மற்ற பொதுமக்கள் கடைக்கு வந்துவந்து, வறிதே மீளும் நிலைதான் ஏற்பட்டது.

அரிசி ‘இன்று வரும், நாளை வரும்’ என்று சொல்லிச் சிலபேரை விரட்டிவிட்டு, வேறு சிலருடைய வீடுகளுக்கு மூட்டை மூட்டையாக அனுப்பியதையும், சர்க்கரையைப் பலபேருடைய கண்ணிலே காட்டாது மறைத்து, சிலருக்கு மட்டும் நிறுத்துக் கொடுத்ததையும் மக்கள் இன்னும் மறக்கவில்லை. சில இடங்களில் ஏமாற்றம் கண்ட பொதுமக்கள், ‘நியாய விலைக் கடை’ என்ற பெயருக்கு முன்னால் ‘அ’ என்ற எழுத்தைச் சேர்த்த நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன.

நியாய விலைக் கடைகள், ஏதோ ஆளும் கட்சியின் அலுவலகம் என்ற நினைப்போடு பலர் நடந்துகொண்டனர். இப்படிப்பட்ட நிலைமைகள், இப்போது திறக்கப்படும் கடைகளிலும் இருக்கும் என்றால், அவற்றைத் திறப்பதைவிட திறவாமலே இருப்பது நல்லது. ‘குறைகூறுவதே இவர்களது குணம்’ என்று சொல்லிவிடலாம் என அரசினர் கருதுவார்களேயாயின், அதனால் உண்மையை மறைத்துவிட இயலாது என்பதையும் அவர்கள் உணர வேண்டும்.

‘ஒன்றே செய்க; அதனை நன்றே செய்க’ என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும். நன்று செய்யாத எதுவும் பாழே. பொதுமக்களின் பணத்தை வைத்து இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடும்போது, விழிப்போடு இருத்தல் நல்லது.

> **`ஒன்றே செய்க; அதனை நன்றே செய்க’ என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும். நன்று செய்யாத எதுவும் பாழே. பொதுமக்களின் பணத்தை வைத்து இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடும்போது, விழிப்போடு இருத்தல் நல்லது.**

நியாய விலைக் கடைகளை அரசினர் அடிக்கடி திறந்து மூட வேண்டிய நிலைமையைவிட, என்றும் எங்கும் நியாயம் நிலைத்திருக்கச் செய்வதில் அரசினர் ஆர்வம் காட்டுதல் வேண்டும். அதுவே நல்லாட்சியின் அறிகுறி. அந்நிலை வரும்வரை நியாய விலைக் கடைகள் நியாய நிலைக் கடைகளாக விளங்குமாறு செய்வார்களாக!

(‘திராவிடநாடு’ தலையங்கம், 23.10.1960)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் கலைஞர் 07



1957- சட்டமன்றத் தேர்தலில், குளித்தலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் கலைஞர். தனது முதல் சட்டமன்ற உரையிலேயே நங்கவரம் விவசாயிகள் பிரச்சினையைப் பேசி கவனம்பெற வைத்தார்.

■ எழுத்து: **மகிழவன்,**
ஏ.ஐ. உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்

``கழகம் கை விடாது!”



25.07.1992 அன்று, நம் கழகத் தலைவர் அவர்களின் நெல்லை வருகையை ஒட்டி, நெல்லை நகர 29-வது வட்டக் கழகச் செயலாளராக இருந்த என் தந்தை ஏ.எஸ்.ஆர்.மணி அவர்கள் வரவேற்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது.. 23.07.1992 அன்று, எதிர்பாராதவிதமாக விபத்தில் மரணம் அடைந்தார். தந்தையை இழந்த எங்களது குடும்பம் மிகவும் நொடித்த நிலையில்.. அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளர், அண்ணன் ஆவுடையப்பன் அவர்களும் முன்னாள் எம்.எல்.ஏ., அண்ணன் ஏ.எல்.சுப்பிரமணியன் அவர்களும் எங்களை அரவணைத்தார்கள். பின்னர், 1995-ஆம் ஆண்டில் 16 வயதே நிரம்பிய என்னை சென்னை அழைத்துவந்து, அறிவாலயத்தில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவரிடம் அறிமுகம் செய்துவைத்தனர். தளபதி அவர்கள் என் தோளைத் தட்டி, ‘கழகம் என்றும் கைவிடாது’ என்று எனக்கு ஆறுதல் கூறினார்கள். கழகம் என்றும் உடன் நிற்கும் என்பதைச் சொல்லும் இந்தப் படம், வாழ்நாளில் மறக்க முடியாது.



ஏ.எஸ்.ஆர்.எம். வெங்கடேஷ்

– **ஏ.எஸ்.ஆர்.எம்.வெங்கடேஷ், திருநெல்வேலி, மாநிலத் துணைச் செயலாளர், கழக மாற்றுத்திறனாளிகள் அணி.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1949

கர்நாடகக் கழகம்!

-ஆம் ஆண்டு, தி.மு.க.வின் தொடக்க நாட்களிலேயே பெங்களூரு, சித்தூர், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் கழகக் கிளைகள் உருவாகின. கர்நாடகத்தில் தமிழர்கள் அதிகமாக இருந்ததால், தி.மு.க.வின் வளர்ச்சி அங்கே அதிகம் இருந்தது. தொடக்கக்காலத்தில், தமிழ்நாட்டுக்கு வெளியே, கர்நாடகா மாநிலத்தில் கழகம் வலுவாக இருந்தது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900